பன்னிமடை ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை:திருமதி.ம.ரத்தினம் மருதாசலம்

ப.ஊ மனைப்பிரிவு வரைபட அனுமதி எண் : 06/2023-24 நாள்: 29/09/2023

பொருள் : மனைப்பிரிவு - பன்னிமடை ஊராட்சி/கிராமம் - க.ச.எண் : 483/1B -ல் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குதல் - உத்தரவு

பார்வை : 1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் அவர்களின் திட்ட அனுமதி எண்: 242/2023 மற்றும் ம.வ.கோ.உ.தி.கு எண் - 209/2023நாள் - 05.05.2023

2.ஊராட்சி மன்ற தீர்மான எண்: 743/2023-24 நாள்: 19-09-2023

3.ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட தான பத்திரம் எண்: 2857/2023 நாள் : 18/04/2023

உத்தரவு

பார்வை 1-ல் காணும் கோவை உள்ளூர் திட்டக் குழுமம் இணை இயக்குநர் அவர்களின் உத்தரவு படி பன்னிமடை க.ச எண்- 483/1B -ல் 2.08 ஏக்கர் பரப்பளவு உள்ள பூமியை மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ள படியும் நகர் ஊரமைப்பு மனைப்பிரிவு திட்ட அனுமதி எண்: 242/2023 மற்றும் ம.வ.கோ.உ.தி.கு எண் - 209/2023 நாள்: 05.05.2023 -படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைபிரிவுள்ள ரோடு மற்றும் பூங்கா பார்வை 3-ல் காணும் தான செட்டில்மெண்ட் பத்திர படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் ஒதிக்கிய மனைகள் 40 விற்பனை செய்துக்கொள்ள ஊராட்சி மன்ற தீர்மான எண்: 743/2023-24 நாள்: 19.09.2023 -ன் படியும் உள்ளூர் திட்ட குழுமம் இணை இயக்குநர் அவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகிறது. மேலும் தாங்கள் முத்திரைத்தாளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கீழ்கண்ட பணிகளை முடித்து ஊராட்சிக்கு ஒப்படைக்கவேண்டும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1.பார்வையில் காண் கடித்தின்படி சிறப்பு நிபந்தனைகள் 1 மற்றும் பொது நிபந்தனைகள் கடைப்பிடிக்க வேண்டும்.

2மனைப்பிரிவிற்கு அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைப்படத்தில் கண்டுள்ள பொது உபயோகத்திற்கு ஒதிக்கீடு செய்யப்பட்ட திரைமிடங்கள் OSR க்கு அணுகுசாலை இடத்தினைச் சுற்றிச் சுவர் மற்றும் தார்சாலை அமைத்து இந்த இடத்தினை எவ்வித ஆக்கிரமிப்புசெய்யக்கூடாது. இங்கு ஆக்கிரமிப்பு செய்தால் மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படும்.

3.அரசினால் பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்கு கட்டுப்பட வேண்டும்

Hemalath. B

M. Ratnam

தலைவர்

பன்னிமடை ஊராட்சி

இணைப்பு

1.

2.

பெறுநர்:

1. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

2. நகர் காவல்துறை துணை இயக்குநர்

[illegible]